# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

விலை 10/=

22.07.2020 புதன்கிழமை


## கட்டாய ஆட்சேர்ப்பு வழக்கு: கண்ணதாசன் விடுதலை!

வவுனியா , ஜூலை 22



ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் போராளியும், யாழ்.பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளருமான கண்ணதாசனுக்கு, வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கிய ஆயுள் தண்டனையை இரத்துச் செய்து விடுதலை

2

## தபால்மூல வாக்களிப்பு: இரு தினங்கள் நீட்டிப்பு

கொழும்பு, ஜூலை 22

தபால்மூலமாக வாக்களிக்கத் தவறியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் மேலதிகமாக இன்னும் இரு தினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2

**ஜூலை 24,25 இறுதி சந்தர்ப்பம்**

## புதினம்? தெரியுமோ

சுன்னாகம் பிரதேச சபையில நேற்று கடும் குழப்பம். சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருத்தரை, தவிசாளர் பேசவிடாமல் தடுக்க, அவர் எழும்பி அடிக்கிற மாதிரிப் போக , "அடித்தே விட்டானய்யா" என்கிற ரேஞ்சில தவிசாளர் கூக்குரலிட , ஒரே கும்மாளம் தான், போங்கள். இந்த ரணகளத்திலும் சில கிளுகிளுப்புகளும் நடக்கத்தான் செய்தன. சபை களேபரமான பின்னர் சகட்டு மேனிக்கு எல்லா உறுப்பினர்களும் , வாரிக் கட்டிக்கொண்டு, வனிதா விஜயகுமாரே தோற்றுப்போகுமளவுக்கு

3

# வாக்கே தமிழர் ஆயுதம்; வாக்களிப்பது கட்டாயம்!

### மன்னார் ஆண்டகை கோரிக்கை



மன்னார், ஜூலை 22

தமிழ் மக்களிடம் தற்போது எஞ்சியுள்ள ஒரேயொரு ஆயுதமான வாக்கினைப் பயன்படுத்தி, பொருத்தமானோரை நாடாளுமன்றம் அனுப்பவேண்டும், தமிழர்களின் ஒற்றுமை சிதறடிக்கப்பட்டுள்ள இந்தத் தேர்தலில் அனைவரும் தமது ஜனநாயகக் கடமையான வாக்களிப்பை மேற்கொள்வது காலத்தின் கட்டாயமாகும் இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

2

## அத்துமீறி மீன்பிடி வழக்கு ஒத்திவைப்பு

வடமராட்சி, ஜூலை 22

வடமராட்சி கடற்பிரதேசத்தில் தென்னிலங்கையில் இருந்து வந்து அத்துமீறித் தொழில்செய்வோருக்கு எதிராக ,சமாசங்கள் சார்பில் சட்டத்தரணி தி.சந்திரசேகரன் ஊடாக பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல்செய்த வழக்கு விசாரணை, நீரியல் வளத் திணைக்களத்தினர் மன்றுக்கு

3

## கூட்டமைப்புக்கே ஆதரவு!

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமது ஆதரவை வழங்கவுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளவர்களில் செயலாற்றல், ஆளுமை, மொழித்திறன் உள்ளவர்களை தெரிவு செய்யுமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழர்

3

## "கருணாவால் புலிகள் தோற்கவில்லை!"



கொழும்பு, ஜூலை 22

" கருணா பிரிந்ததாலேயே புலிகள் அமைப்பு பலவீனமடைந்ததாகக் கூறுவதும், அதனாலேயே அவர்கள் போரில் தோல்வியடைந்தனர் எனக் கூறுவதும் தவறு. அவர் புலிகளிடமிருந்து பிரிந்த இரண்டே வாரங்களில் கிழக்கின் பலத்தை புலிகள் மீண்டும் கைப்பற்றினர். இதனால் கருணா கொழும்புக்குத் தப்பியோடவேண்டிய நிலை ஏற்பட்டது." இவ்வாறு இறுதிகட்

3

## அலைபேசி வெடித்து இளைஞர் மரணம்!



கொழும்பு, ஜூலை 22

சார்ஜரில் போட்ட அலைபேசி வெடித்துச் சிதறியதில் இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். தும்மலசூரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிப்ன்ன துனகதெனிய பிரதேசத்தை சேர்ந்த 28 வயதான இளைஞர் ஒருவர் தினமும் இரவு அலைபேசியை

3



## கிளிநொச்சியில் கைக்குண்டு மீட்பு!

கிளிநொச்சி , ஜூலை 22

கிளிநொச்சியில் வாய்க்காலுக்கு அருகிலுள்ள பற்றைக்குக்குள் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் தம்பிராசபுரம்

3

# வாக்கே தமிழர்....

மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை மறை மாவட்ட இறைமக்களுக்கு எழுதும் மேய்ப்புப்ப ணித் திருமடலிலேயே இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இது குறித்து அந்தத் திருமடலில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

"ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நாம் மீண்டும் ஒரு பொதுத்தேர்தலைச் சந்திக்கின்றோம். 'கொரோனா' வைரஸ் நோயின் தாக்கமும், அச்ச மும் நிறைந்த இக்கால கட்டத்தில் இந்தத் தேர்தல் நம்மை நோக்கி வருகின்றது.

இன்றைய எமது அரசியல் சூழ்நிலை, தமிழ்த்தேசி யத்தின் அடிப்படைகள், தீர்க்கப்படாத தொடரும் பிரச்சினைகள், ஜனநாயக உரிமைகளைப் பயன்ப டுத்துவதன் அவசியம், வேட்பாளர்களை எப்படி இனங்காண்பது, எப்படிப்பட்ட பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் போன்றவை குறித்து சில சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

இன்று உலகில் பெரும்பாலான நாடுகளில் ஜனநா யக ஆட்சிமுறை நடைமுறையில் உள்ளது. இந்த நிலையில் கிறிஸ்தவர்கள் தம் நாட்டு அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக அல்லது அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டவர்களாக இருக்க முடியாது. மாறாகப் பொறுப்புள்ள குடிமக்கள் என்ற வகை யில் தமது அரசியல் கடமைகளைத் தவறாது நிறைவாக ஆற்றவேண்டும்

அரசியல் புனிதமானது. ஆனால் தவறானவர்கள் அதற்குள் நுழைவதனால் அது சிலவேளை சாக்க டையாகின்றது.இந்தப் புனிதமான அரசியலில் எல்லா மக்களைப்போல கிறிஸ்தவகர்களும் ஈடுப டவேண்டும் எனத் திருச்சபை விரும்புகின்றது, ஊக்குவிக்கின்றது. அதேவேளை மிக முக்கியமான, மிக அவசியமான சூழ்நிலையில் அன்றி பொதுவா கத் திருச்சபை கட்சி அரசியலில் ஈடுபடுவதில்லை.

**இன்றைய எமது சூழ்நிலை**

இன்றைய எமது நாட்டு அரசியல் சூழ்நிலை மிகவும் சிக்கலானதாக உள்ளது. பெரும்பான்மை மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தும் அரசியல் தலை மையே இன்று நாட்டில் காணப்படுகின்றது. தமிழ் அரசியல் நிலைமை இன்னும் குழப்பமான தாக உள்ளது. முன்பு ஓரளவுக்கேனும் இருந்த ஒற்றுமை நிலைமை இன்று இல்லாது போய்விட் டது. உதாரணமாக வன்னித் தேர்தல் நிலைமையை எடுத்துக்கொண்டால் வரலாற்றில் என்றுமில்லாத வாறு 6 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 45 கட்சிகளைச் சேர்ந்த 405 உறுப்பி னர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். தமிழர் அரசியல் எந்தளவுக்கு சிதறிச் சின்னாபின்னமாகி இருக்கிறது என்பது இதிலிருந்து புலனாகின்றது. ஒரு ஜனநாயக நாட்டில் யாரும் போட்டியிடலாம், எத்தனை பேரும் போட்டியிட லாம் என்ற நிலைப்பாடு இருந்தாலும் தமிழர் அரசியல் பலம் சிதறிடிக் கப்பட்டுள்ளது என்பது இத்தேர்தலில் வெள்ளிடைமலை. இந்நிலையில் இந்தத்தேர்தலில் நமது நிலைப்பாடு என்ன என்பது முக்கியமான கேள்வி. காலத்துக்குக் காலம் அரசி யல் சூழ்நிலைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. இன்றைய அரசியல் சூழ்நிலையை நாம் நின்று நிதானித்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

**தமிழ்த்தேசியத்தின் அடிப்படைகள்**

சுயாட்சி, சுயநிர்ணயம், தமிழர் தாயகம், மொழியு ரிமை போன்ற தமிழ்த்தேசியத்தின் அடிப்படைகள் என்றும் மாறாதவை, எந்தவித விட்டுக்கொடுப் புக்கோ சமரசத்துக்கோ உள்ளாக்கப்பட முடியாதவை.

இவற்றை முன்னிலைப்படுத்தியே பல சகாப்தங்க ளாக அகிம்சைப் போராட்டத்தையும் ஆயுதப்போ ராட்டத்தையும் தமிழ் மக்கள் முன்னெடுத்து வந்துள்ளனர்.

இவற்றை வென்றெடுக்கவே பல ஆயிரம் உயிர்க ளையும், உடைமைகளையும் இழந்துள்ளோம். இன்னும் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்துள் ளோம். எனவே தமிழ்த் தேசியத்திற்கு அப்பாற் பட்ட கொள்கையுடையவர்களை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழர்களாகிய நமக்கு நமது உரிமைகள் முக்கியமா அல்லது சலுகைகள் முக்கி யமா என்றால் முதலில் நமது உரிமைகள் நமக்கு முக்கியம். அத்தோடு நாம் நின்று விடமுடியாது.

நமது அடிப்படைத் தேவைகளும் இன்னும் நமது மக்களுக்கான அபிவிருத்திகளும் நமக்குத் தேவை. இவை இரண்டுக்குமான நமது அரசியல் போராட் டம் சமாந்தரமாகச் செல்ல வேண்டும். ஒன்றுக்காக ஒன்றை நாம் விட்டுக்கொடுக்க முடியாது.

**தீர்க்கப்படாத தொடரும் பிரச்சினைகள்**

இந்த நாட்டில் தமிழ் மக்களின் பல பிரச்சினை கள் தீர்க்கப்படாமல் தொடர்கதையாகவே உள்ளன. அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப் பட்டோர் பிரச்சினை, முன்னாள் போராளிகளுக் கான புனர்வாழ்வு, யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்க ளுக்கான இழப்பீடு, நிலைமாறுகால நீதி போன் றவை அவசரமாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்சி னைகளாகும். இவற்றை முன்னிலைப்படுத்தி ஓங்கிக் குரல்கொடுக்கக்கூடியவர்கள், அக்கறை யோடு துணிவோடு செயலாற்றக்கூடியவர்களை நாம் தெரிவுசெய்யவேண்டும்.

**வாக்கே ஆயுதம்**

நமது ஜனநாயக உரிமைகள் மட்டில் நாம் மிகவும் விழிப்போடு இருக்க வேண்டும். தேர்தலில் வாக்க ளிப்பது நமது உரிமையும் கடமையும் ஆகும். நமது இந்தப் புனிதமான ஜனநாயக உரிமையை நாம் விட்டுக்கொடுக்கவோ அல்லது நமது இந்த ஜனநாயகக் கடமையை உதாசீனம் செய்யவோ கூடாது. தமிழ் மக்களாகிய நமக்கு இன்று இருக்கக் கூடிய ஒரேயொரு ஆயுதம் நமது வாக்குச் சீட்டுத்தான். எனவே அதை நாம் முறையாகப் பயன்படுத்தி தகுதியான பிரதிநிதிகளை நாடாளு மன்றத்துக்கு அனுப்ப வேண்டும். இது விடயத்தில் நாம் அலட்சியமாக இருக்கக்கூடாது.

**சரியானவர்களையும் தவறானவர்களையும் இனங்காண்போம்**

இரண்டாம் வத்திக்கான் சங்கம் கண்டனத்திற்குரிய ஆட்சிமுறை குறித்துப் பேசுகின்றது. 'கண்டனத்திற் குரிய அரசியல் ஆட்சிமுறைகள் சில விடயங்களில் இருந்துகொண்டுதான் வருகின்றன. இவை குடிமை உரிமைக்கு அல்லது சமயச் சுதந்திரத்திற்கு தடை போடுகின்றன.

அரசியல் ஆதாயம் சார்ந்த, கட்டுக்கடங்காப் பேராசைக்கும் இழிசெயலுக்கும் பலரைப் பலியாக் குகின்றன. அதிகாரத்தைப் பொதுநலனுக்கெனப் பயன்படுத்தாமல் ஒருசில குறிப்பிட்ட பிரிவினருடைய அல்லது ஆட்சியாளர்களுடைய வசதிக்கெனவே திரித்துவிடுகின்றன' (இன்றைய உலகில் திருச்சபை எண். 73). இத்தகைய சூழ்நிலை நமது நாட்டிலும் இல்லாமல் இல்லை. எனவே இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை நாம் சரியாக இனம்காண வேண்டும்.

**யாரை ஆதரிப்பது? யாரை நிராகரிப்பது?**

ஒவ்வொரு கட்சியினதும் சுயேச்சை வேட்பாளர்க ளினதும் தேர்தல் வாக்குறுதிகளை நாம் நுணுக்கமாகச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மக்கள் நலன்சார்ந்த, பொதுநலன் சார்ந்த, சமய விழுமியங்களைக்கொண்ட தேர்தல் வாக்குறுதி களை நாம் அடையாளம் காணவேண்டும். போலியான, பொய்யான நடைமுறைச்சாத்திய மற்ற வாக்குறுதிகளோடு வரும் வேட்பாளர்களை நிராகரிப்போம்.உண்மையான, நடைமுறைச்சாத்தி யமான வாக்குறுதிகளோடு வரும் வேட்பாளர் களை ஆதரிப்போம். உண்மை, நேர்மை, சேவை மனப்பான்மை உள்ள வேட்பாளரை ஆதரிப் போம். பொய், புரளி சுயநல மனப்பான்மை கொண்ட வேட்பாளரை நிராகரிப்போம். மதத்து வேசம், இனத்துவேசம், மொழித்துவேசம் கொண்ட வேட்பாளர்களை நிராகரிப்போம், மதப்பற்றும், இனப்பற்றும், மொழிப்பற்றும் கொண்ட வேட்பா ளர்களை ஆதரிப்போம். குழப்பவாதிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் நிராகரிப்போம். சமாதான விரும்பிகளையும், சமூக அக்கறை கொண்டவர்க ளையும் ஆதரிப்போம்.

அறிஞர் பெர்னாட் ஷோ கூறும் வார்த்தைகள் இவ்வேளையில் நினைவுகூரத்தக்கன: 'வாக்காளர் கள் முட்டாள்களாக இருந்தால் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்றத்துக்குச் செல்பவர்கள் அயோக்கியர்களாகத்தான் இருப் பார்கள்' எனவே நமது யதார்த்த சூழ்நிலையை நுணுகி ஆராய்ந்து, நமது தனிப்பட்ட சுயநலன்களுக்கு அப்பால் நின்று, மனச்சாட்சியின் குரலுக்கு செவிமடுத்து இத்தேர்தலைச் சந்திப் போம், நமது வாக்குரிமையைப் பயன்படுத்து வோம்."என்றுள்ளது. (அ)

# கட்டாய ஆட்சேர்ப்பு...

செய்தது மேன் முறையீட்டு நீதிமன்றம் . சட்டமா அதிபர் திணைக்களம் ,ஏற்க னவே இடம்பெற்ற விசாரணைகளை நியாயப்படுத்தமுடியாதிருப்பதாக ஒத்துக் கொண்டமையாலே கண்ணதா சன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் போராளியும், யாழ்.பல்க லைக்கழக இசைத்துறை விரிவுரையாளருமான கண்ணதாசன் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கில் வவுனியா மேல் நீதிமன்றினால் ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது. இவ்வாறு வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு, கடந்த மே மாதம் 13ம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது. இதேநேரம் அன்றைய தினம் குற்றவாளியும் மன்றுக்கு அழைத் துவரப்பட்டிருக்கவில்லை.

கண்ணதாசனால் மேன்முறையீடு செய்யப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கில் வவுனியா மேல் நீதிமன்றினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை நியாயப்ப டுத்த முடியவில்லை என்றும் அதனால் மீண்டும் விசாரணை வேண்டும் என அன்றைய தினம் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் குமார் ரட்ண கோரிக்கை முன்வைத்து அதற்கு இணக் கம் கோரினார்.

அதனால் குற்றம் சாட்டப்பட்டவரை யும் அழைத்துவருமாறும்,ஏற்கனவே இடம்பெற்ற விசாரணையை நியாயப்படுத்த முடியவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் ஏற் றுக்கொண்டதன் அடிப்படையில் மீள் விசாரணையா அல்லது விடுதலையா என்பதனை அன்றைய தினம் தெரிவிப்ப தாகக் கூறி குறித்த வழக்கு இன்று புதன் கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டிருந் தது. இதன் அடிப்படையில் இந்த வழக்கு இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதியரசர்களான அச்சல வெங்கப் புலி மற்றும் பிரியங்க புனான்டோ ஆகியோர் கண்ணதாசனுக்கு வழங்கிய தண்டனையினையும் இரத்துச் செய்வ தோடு வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை தள்ளுபடி செய்து விடு தலை செய்வதோடு சட்டமா அதிபர் தீர்மா னித்தால் மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யலாம் எனத் தீர்ப்பளித்தனர். (அ)

# தபால் மூல...

இம்முறை பொதுத்தேர்தலுக்கு மொத்த மாக 705,085 தபால்மூல வாக்காளர்கள் வாக்கினை அளிக்கத் தகுதி பெற்றிருந்த னர். அவர்கள் ஜூலை 13 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை வாக்களிக்க லாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இவ்வாறு வழங்கப்பட்ட தினங்களில், தபால் வாக்குகளை பதிவு செய்ய முடியாமல் போனவர்கள் ஜூலை 24 & 25 ஆகிய தினங்களில் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலகங்க ளில் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். அதன்படி, 24 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையும் 25 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையும் வாக்குக ளைப் பதிவு செய்ய முடியும். இதேவேளை கொரோனா அச்சம் காரண மாக அநுராதபுரம், ராஜாங்கனை பிர தேச செயலர் பிரிவில் தபால் மூல வாக்களிப்பு மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (அ)

# அத்துமீறி மீன்பிடி...

வருகை தராமையால் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
வடமராட்சி கடற்பிரதேசத்தில் தென்னிலங்கையில் இருந்து வந்து, அத்துமீறித் தொழில் செய்வோருக்கு எதிராக கடந்த ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதனையடுத்து பருத்தித்துறை நீதிமன்றம் அத்துமீறிய மீன்பிடிக்கு இடைக் கால தடை விதித்தது . இரு வாரங்களுக்கு ஒரு தடவை இந்தத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டு வந்தது.
ஆயினும் இனிமேல் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறமாட்டார்கள் என்பதால் இடைக்காலத் தடையுத் தரவை நீடிக்கத் தேவையில்லை என பருத்தித்துறை பொலிஸார் தெரிவித் தன் அடிப்படையில், தடையுத்தரவு கைவிடப்பட்டு இருந்தது.
ஆயினும் அதன் பின்னர் மீண்டும் தென்னிலங்கை மீனவர்களின் அத்து மீறல் தொடர்வதால், வடமராட்சி மீனவர் சங்க சமாசப் பிரதிநிதிகள் , தம் சார்பாக சட்டத்தரணி ஊடக நகர்த்தல் பத்திரம் ஒன்றை மன்றில் சமர்ப்பித்திருந்தனர். இதனடிப்படையில் இந்த வழக்கு இன்றைய தினம் விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது.
இருப்பினும் இன்றையதினம் நீரியல் வளத் திணைக்களத்தினர் மன்றுக்கு வருகைதராததால், எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை நீரியல் வளத் திணைக்களத்தினரை வரவழைத்து, விசாரணை செய்து கட்டளை வழங்குவதாக பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டார். (அ -26)

# கூட்டமைப்புக்கே...

ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் செயலாளர் குமாரசாமி அருணாசலம் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்;.
அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது – "
2020 ஒகஸ்ட் 05 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவினை வழங்கவுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.
சங்க உறுப்பினர்கள் தேர்தல் சட்டவிதிகளுக்கு அமைவாகச் செயற்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
தமது சங்கத்தின் தற்போதைய தலைவர் இரா.சச்சிதானந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளதுடன் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும் சங்கத்தின் ஆலோசகருமான த.மகாசிவத்தின் பெயர் தேசிய பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் கோரிக்கைக்கு அமைய வடக்கு கிழக்கு மாகாணத்தில் 20 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வகையில் அனைத்து உறுப்பினர்களும் செயற்பட வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# தினம் ஒரு ? தெரியுமோ

வாய்ச்சண்டை யில் இறங்கினர்.
இப்படி வாய்த்தர்க்கம் செய்கையில் , சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர் , ஈ.பி.டி.பி உறுப்பினரைப்.பார்த்து "உங்கள் கட்சி போல எங்கட கட்சி கொலை, கற்பழிப்பு எண்டு திரியிற கட்சி இல்லை" எண்டு தெறிக்கவிட, பதிலுக்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர் உன்னை வெளுப்பன் இப்ப எண்டு சொல்ல , பிரச்சினை தவிசாளருக்கு அடிக்கப்போனதை விட்டுட்டு இஞ்சால தாவிட்டுது. "அதெப்பிடி ஒரு பெண் உறுப்பினரைப் பார்த்து இப்பிடிச் சொல்லலாம்" எண்டு எல்லாரும் கத்த,.
"எங்கட கட்சியை தரக்குறைவா சொன்னால் கோபம் வரும் தானே" எண்டு ஈ.பி.டி.பி உறுப்பினர் உறும, பிரச்சினை பெரிதானது. ஒருகட்டத்தில் ஈ.பி.டி.பி.உறுப்பினர் மன்னிப்புக் கேட்க நிலைமை கொஞ்சம் சுமுகமானது. எண்டாலும் போற போக்கில சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருத்தர் ஈ.பி.டி.பி. உறுப்பினரைப் பார்த்து "இவங்கள் எல்லாம் கோத்தாவின் ஒட்டுக்குழு" என்று புறுபுறுத்தபடி போனார். அப்ப வேடிக்கை பார்க்க போன திருவாளர் பொதுசனம் ஒருத்தர் சொன்னாராம் "அவங்களும்( ஈ.பி.டி.பியும்) நீங்களும் ( சுதந்திரக் கட்சியும்) ஒட்டுக் குழுவோ இல்லையோ ஆனா மொட்டுக்குழு" எண்டு
—பட்சி



# அலைபேசி வெடித்து...

சார்ஜரில் இணைத்துவிட்டு, 'ஹெட்போனை' காதில் மாட்டிக் கொண்டு உறங்குவது வழக்கம்.
நேற்று முன் தினம் இரவு அவர் இதுபோன்று உறங்கியபோது, திடீரென அலைபேசி வெடித்துச் சிதறியது. தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில்,அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார்.எனினும் சிகிச்சை பெற்று வந்தநிலையில் நேற்றிரவு அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# கிளிநொச்சியில்...

பகுதியிலேயே இந்தக் கைக்குண்டு இருப்பதைப் பொதுமக்கள் இன்று அவதானித்துள்ளனர். பின்னர் அது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து, சம்பவ இடத்தினை அடையாளப்படுத்திய பொலிஸார், கைக்குண்டை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-6)

# கருணாவால்....

டப்போரை வழிநடத்திய முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.
புலிகள் அமைப்பில் இருந்து கருணா பிரிந்ததாலேயே புலிகளைப் பலவீனப்படுத்தி, போரை வெல்ல முடிந்ததாக , பொதுஜன பெரமுன கட்சியினர் அண்மைக்காலமாக கூறிவருகின்றனர். இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே பொன்சேகா, மேற்கண்டவாறு அந்தக் கருத்தை மறுதலித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், " கருணா வெளியேறினார் என்பதால் புலிகள் அமைப்பு இரண்டாகப் பிளவுபடவுமில்லை, பலவீனமடையவுமில்லை. இரண்டு வாரங்கள் மட்டுமே கிழக்கை,கருணா அம்மான் கைப்பற்றி வைத்திருந்தார். எனினும், கிழக்கை மீட்க உடனடியாகவே பிரபாகரன் தாக்குதல் அணியொன்றை அனுப்பியிருந்தார். வாழைச்சேனை பகுதியில் உள்ள கஜுவத்தை பகுதிக்கு கடல்வழியாக வந்த புலிகளின் தாக்குதல் படையணி, தாக்குதல் நடத்தி கருணாவின் உறுப்பினர்களைக் கொன்றனர்.
இத்தாக்குதலால் கருணாவுக்கு நடுக்கம் வந்துவிட்டது. 2 நாட்களுக்குள் தம்முடன் இருந்த பெண் போராளிகள், சிறுவர் போராளிகள் ஆகியோரை ஆயுதங்களை போட்டுவிட்டு வீடுகளுக்கு தப்பிச் செல்லுமாறு கூறியதுடன், சுங்காவில் பகுதியில் பிள்ளையானின் முகாமில் தஞ்சமடைந்தார். 150 பேர்தான் இறுதியில் எஞ்சினர். அதிலும் பலர் சிறுவர் போராளிகள். அங்கிருந்தும் கொழும்புக்கு கருணா ஓடிவந்தார்.
அதன்பின்னர் புலிகளின் மற்றொரு தளபதியான ரமேஷ் என்பவர் வீடுகளுக்குச் சென்ற போராளிகளை ஒன்றிணைத்து இரண்டு, மூன்று வாரங்களுக்குள் கிழக்கில் புலிகளின் பலத்தை நிலைநிறுத்தினார், எனவே, கருணாவின் பிரிவால் கிழக்கில் புலிகளின் பலம் குறையவில்லை.அவ்வாறு கூறுவது தவறு " என்றார்.(அ44)

# வவுனியாவில் டெங்கு பரிசோதனைகள்



வவுனியா, ஜுலை 22
வவுனியா நகர்ப் பகுதிகளிலுள்ள கிணறுகளில் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படு வதால் டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
அந்தவகையில் வவுனியா நகரின் வேப்பங்குளம் , குருமன்காடு , பூந்தோட்டம், வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த சில தினங்களாக வவுனியா சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் மேலும் மூன்று குழுக்கள் இணைந்து டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அடையாளப்படுத்துவதுடன், கிணறுகளில் டெங்கு நுளம்பின் பெருக்கம் தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர் .
கொரோனா நோய்த் தொற்றுக் காரணமாக மக்களின் அன்றாட செயற்பாடுகளின் நடவடிக்கைகளில் டெங்கு மலேரியா நுளம்பின் தாக்கம் பற்றிய விழிப்புணர்வுகள் குறைவடைந்து செல்கின்றன.
எனவே அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் விதமாக இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
அத்துடன் டெங்கு, மலேரியா பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அதிகாரிகள் பொது மக்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (ரி3-110)

# மகள் துஷ்பிரயோகம்; தந்தைக்கு 54 வருட சிறை



களுத்துறை, ஜுலை 22
தனது மகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய தந்தைக்கு 54 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
இந்த வழக்கு இன்று களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி வசந்த ஜினதாச முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
2011 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி, மதுகம பகுதியைச் சேர்ந்த பிரதிவாதி தமது 11 வயது மகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாகவும், அவருக்கு எதிராக 3 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# அதிகரிக்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்

## 'ஸ்டொப் சைல்ட் கியூட்லி டிரஸ்ட்' வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜூலை 22



2020ஆம் ஆண்டின் முதல் 15 நாள்களில் மாத்திரம் இலங்கையில் 140 பாலியல் வன்புணர்வுகள், 42 பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் 54 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் தொடர்பான 'ஸ்டொப் சைல்ட் கியூட்லி டிரஸ்ட்' (Stop Child Cruelty Trust) என்ற அமைப்பு இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

மேலும், இதுவரை 5442 சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் 1642 பெண்கள் துஸ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனஅந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு முடிவடைந்தபோது சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான 17ஆயிரம் சம்பவ விசாரணைகள் 10 வருடங்களாக கிடப்பில் உள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்திருந்தது. இது 2018ஆம் ஆண்டு 20ஆயிரமாக அதிகரித்துள்ளது. எனவே பாதிக்கப்பட்டவர்கள் நீதியின் மீது எவ்வித நம்பிக்கையும் இன்றி வாழ்கின்றனர் என 'ஸ்டொப் சைல்ட் கியூட்லி டிரஸ்ட்' குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 2018ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், இலங்கையில் சிறுவர்களின் பாதுகாப்பு குறித்து "சிவப்பு எச்சரிக்கை" விடுத்து கவலையை வெளியிட்டிருந்தமையையும் குறித்த சிறுவர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ரி3)

## கிராம அபிவிருத்தி நிலையத்தால் யாழில் கைகழுவும் தொட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வவுனியா கிராம அபிவிருத்தி நிலையத்தால், யாழ்.பிரதேச செயலகப் பிரிவுகளில் கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக தலா 24ஆயிரம் ரூபா செலவில் பொதுமக்கள் கூடும் பல இடங்களில் காலால் அழுத்தி கைகழுவும் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் அருகே கொரோனாத் தொற்றுப் பாதுகாப்பை உணர்த்தும் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.

நாவாந்துறை, குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை ஜே/62, பொம்மைவெளி , முஸ்லிம் தெரு கிராமம் ஆகிய கிராமசேவையாளர் அலுவலகங்கள் மற்றும் குருநகர் பிரதேச வைத்தியசாலை ஆகிய இடங்களில் கைகழுவும் தொட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன என வெளிக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ரி3-135)

## கார்– சைக்கிள் விபத்து ஒருவர் உயிரிழப்பு

குளியாப்பிட்டி ஹெட்டிபால குபுராபொல பிரதேசத்தில், நேற்றைய தினம் காருடன் மோதுண்டு சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சார்பாக இம்முறை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் காருடன் மோதுண்டே விபத்து நடைபெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் காரின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

## விபத்தில் சிறுமி காயம்

சாவகச்சேரி, ஜூலை 22

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த தந்தையும் மகளும் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் இன்று காலை நுணாவில் மத்தியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த சிறுமி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரி3-9)

## தாக்குதலில் காயமடைந்த இருவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஜூலை 22

இனந்தெரியாதோரின் தாக்குதலில் காயமடைந்த பெண் ஒருவரும் அவரது தம்பியும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு பளை மாசாரில் இடம்பெற்றுள்ளது. (ரி3-9)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

ஹொரணை இலிப பிரதேசத்தில் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட நபரிடம் இருந்து துப் பாக்கி மற்றும் ரவைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர், கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி வீடு ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் கொலை தொடர்பிலான பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

## சிறுகுற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்க ஜனாதிபதியால் விசேட குழு

கொழும்பு, ஜூலை 22

சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக சிறு குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமித்துள்ளார்.

சிறைச்சாலை திணைக்களம் பகிர்ந்துள்ள புள்ளிவிவரங்களின் படி, தற்போது 26,000 பேர் இலங்கை முழுவதும் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை தற்போதைய சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களின்படி, 15,000 கைதிகள் மாத்திரமே சிறையில் உள்ளனர்.

சிறைகளில் ஏற்பட்டுள்ள நெரிசலைக் குறைக்கும் முயற்சியில், சிறு குற்றங்களில் ஈடுபடும் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குவதற்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி விடயம் தொடர்பில் இக் குழு இதுவரையில் உறுதியான முடிவை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)




## மேலதிக வகுப்பு ஆசிரியர்கள், மாணவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள்

கஹதுடுவ, ஜூலை 22

கொழும்பின் புறநகர் பகுதியான கஹதுடுவ பிரதேசத்தில் மேலதிக வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட 65 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவன் ஒருவன் மேலதிக வகுப்புக்குச் சென்றமை தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்தே அவர்களுக்குப் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான நபருடன் நெருங்கிச் செயற்பட்ட மூவர் ஹோமாகம பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் சிறுவர்கள் இருவரும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## நிதி நிறுவனத்தில் தீ

மாத்தறை,ஜூலை 22

மாத்தறை தர்மபால மாவத்தையில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் இன்று காலை தீ பரவியுள்ளது. தீயணைப்புக்கு இரு தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. தீப் பரவலுக்கான காரணம் இதுவரையில் அறியப்படவில்லை. சம்பவத்தின்போது எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## பணம் கொள்ளையடிப்பு பொலிஸார் இருவர் கைது

புத்தளம், ஜூலை 22

நபர் ஒருவரிடம் 92 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடித்த சம்பவத்தில் இரண்டு பொலிஸார் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம், மஹவெவ பொலிஸ் வீதித் தடை ஊடாக, நபர் ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் அந்த வீதித் தடையில் மோதியுள்ளது. இதன்போது இந்த நபரின் பையில் இருந்த 92 ஆயிரம் ரூபா காணாமல் போய்விட்டது என்றும் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த பொலிஸ் அதிகாரிகள் இருவரும் குறித்த நபரை திட்டித்தாக்கி, பணத்தையும் கொள்ளையடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்தே குறித்த பொலிஸ் அதிகாரிகள் இருவ ரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது. (ரி3)

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பகிஷ்கரிப்பு:

# நாடு முழுவதும் பல பணிகள் ஸ்தம்பிதம்

கொழும்பு, ஜூலை 22

இலங்கை முழுவதும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் முன்னெடுத்துள்ள பகிஷ்கரிப்பு நடவடிக்கை காரணமாகப் பெரும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

கொரோனா நோயாளிகளைக் கண்டுபிடித்து தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதிலும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. அதற்கமைய கொரோனா தடுப்பு நடவடிக்கை மற்றும் டெங்கு நோய் பரிசோதனைக்காக வீடுகளுக்கு செல்லும் நடவடிக்கை, நுளம்பு பெருகும் இடத்தை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவ



டிக்கை மேற்கொள்ளுதல் உட்பட பல்வேறு நடவடிக்கைகள் இதுவரையில் தடைப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை நீடித்தால் பெரும் சிக்கல் நிலைமை ஒன்று நாட்டில் ஏற்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## எண்ணெய்க் கழிவை கடலில் வீசிய 15 நிறுவனங்களின் அனுமதி இரத்து

கொழும்பு, ஜூலை 22

சூழல் பாதுகாப்பு சட்டங்களை மீறி கப்பல்களில் எரிந்த நிலையில் கழிவுகளாக எஞ்சியிருந்த எண்ணெய்யை கடலில் வீசிய, 15 உள்நாட்டு நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று சமுத்திர சூழலியல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடற்படை, பொலிஸ் சூழல் பிரிவு, கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த நிறுவனங்கள் இனங்காணப்பட்டன என சபை குறிப்பிட்டுள்ளது. (ரி1)

## வேலையின்மை வீதம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 22

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தின் காலாண்டுப் பகுதியில் வேலையின்மை 1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி இது நூற்றுக்கு 5.7 சதவீதமாகும்.

தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தின் கணக்கெடுப்பின்படி இந்தாண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் நாட்டில் வேலையற்றோர் எண்ணிக்கை 83,172ஆக காணப்படுகிறது. (ரி3)

# அம்பாந்தோட்டைத் துறைமுகம் இலங்கைக்கே சொந்தம்

## சீனத் தூதரகம் டுவிட்

கொழும்பு, ஜூலை 22

அம்பாந்தோட்டை துறைமுகம் 100 வீதம் இலங்கைக்குச் சொந்தமானது எனச் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சீனத் தூதரகம் இது தொடர்பில் தமது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.


Chinese Embassy in Sri Lanka
@ChinaEmbSL

1. Consecutive Gov'ts of Sri Lanka invited Chinese companies to build and jointly operate the #Hambantota (not Hanbantota) Port, with 100% ownership, defence & sovereignty.
2. Laos is a landlocked country.
3. Britain took over and colonized Sri Lanka from 1796 till 1948 by guns.

மஹியங்கனைப் பிரதேசத்தில் வைத்து அண்மையில் தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றிய மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கு சொந்தமான சொத்தை முன்னைய அரசாங்கம் வெளிநாட்டு அரசாங்கத்துக்கு விற்பனை செய்துவிட்டது என்று குற்றம் சுமத்தியிருந்தார்.

இலங்கையின் முன்னைய அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்குக் கொடுத்து விட்டது என்று குறிப்பிட்டிருந்தார். முன்னாள் அமைச்சர்கள் சிலர் இது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது அமைதியாக இருந்தமை தொடர்பிலும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

எனினும் இது தொடர்பில் டுவிட்டர் பதிவை செய்துள்ள சீனத் தூதரகம், தொடர்ந்து வரும் இலங்கை அரசாங்கங்களுடன் அம்பாந்தோட்டை துறைமுகப் பணிகள் கூட்டு அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. எனவே இந்த உடன்படிக்கையின் மூலம் இலங்கையின் 100 வீத உரிமை மற்றும் பாதுகாப்பு, இறைமை என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டைத் துறைமுகம் 100 வீதம் இலங்கைக்குச் சொந்தமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

## உயர் பாதுகாப்பு வலயத்தினுள் தொழில்நுட்ப ட்ரோனுடன் வெளிநாட்டவர் கைது

கண்டி, ஜூலை 22

தலதா மாளிகை மற்றும் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் உலாவிய உக்ரேனியர் (வயது 35) ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். தனது ட்ரோன் கட்டுப்பாட்டை இழந்துவிட்டது எனவும், இயந்திரத்தைத் தேடுவதற்காக ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் வந்தார் எனவும் சந்தேக நபர் ஆரம்ப விசாரணைகளில் தெரிவித்துள்ளார். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கண்டி தலதா மாளிகைக்கு எதிரேயுள்ள ஹோட்டலில் தங்கியிருந்த இந் நபர் நேற்று இரவு தலதா மாளிகை, ஜனாதிபதி மாளிகை மற்றும் பிற முக்கிய இடங்களைப் படம்பிடிக்க ட்ரோனை இயக்கியதாக தெரியவந்துள்ளது. சந்தேகநபரின் ஹோட்டல் அறையை பொலிஸார் பரிசோதித்ததில் உயர் தொழில்நுட்ப ட்ரோன் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. இது தன்னியக்கமாகவே புறப்பட்ட இடத்தை வந்தடையும் தொழில்நுட்பமுடையது. அத்துடன்மடிக்கணினி ஒன்றையும் பொலிஸார் பறிமுதல்செய்துள்ளனர்.

சந்தேக நபர் பாஸ்போர்ட் அல்லது செல்லுபடியாகும் விசா வைத்திருக்கவில்லை எனவும், இவர் கடந்த ஆண்டின் பிற்பகுதியில் இலங்கைக்கு வந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

## பொருளாதாரத்தை மீட்க 750 பில்லியன் யூரோ

### ஐரோ. ஒன்றியம் ஒப்புதல்

பிரஸ்ஸல்ஸ், ஜூலை 22

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீட்டெடுக்க 750 பில்லியன் யூரோ மதிப்பிலான நிதி தொகுப்பிற்கு ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைமை அலுவலகத்தில், பட்ஜெட் மற்றும் பொருளாதார மீட்பு நிதி தொகுப்பு உள்ளிட்டவை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராக உள்ள நாடுகளின் தலைவர்கள் நேரடியாகச் சந்தித்து ஆலோசனை நடத்தினர். கடந்த ஐந்து நாள்களாக நடந்த ஆலோசனைக்கு பின்னர், இறுதியாக ஐரோப்பிய ஒன்றிய கவுன்சில் தலைவர் சார்ள்ஸ் மைக்கேல் ஒற்றை வரியில் 'டீல்' என டுவிட்டரில் பதிவிட்டார்.

கொரோனா தொற்றால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிதி தொகுப்புடன், முன்னெப்போதும் இல்லாத வகையில், அடுத்த 7 ஆண்டுகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒட்டுமொத்த பட்ஜெட் தொகையாக 1.82 டிரில்லியன் யூரோக்கள் ஒதுக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒப்புதல் குறித்து "ஐரோப்பாவுக்கு வரலாற்று சிறப்பு மிக்க தினம்" என பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன் பாராட்டுத் தெரிவித்துள்ளார். (ரி1)

# கொரோனாவைக் கட்டுப்படுத்த முறையான வேலைத்திட்டம்

## சவேந்திர சில்வா பெருமிதம்

கொழும்பு, ஜூலை 22

கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தலுக்கென முறையான வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த முடிந்துள்ளது என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் வெற்றிகரமான முறை பின்பற்றப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகில் வல்லரசு நாடுகளையும் ஆட்டிப்படைத்து வரும் கொரோனா வைரஸ் தொற்று பல்வேறு இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இலங்கையில் சிறந்த முறையான வழிகாட்டல்கள் மற்றும் அவை பின்பற்றப்படும் விதம் காரணமாக வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடிந்துள்ளது. கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தை சூழவுள்ள சகலரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)



கடந்த 24 மணிநேர காலத்தில்

# புதிய தொற்றாளர் எவருமில்லை




கொழும்பு, ஜூலை 22

இலங்கையில் கடந்த 24 மணிநேர காலப் பகுதியில் புதிய கொரோனாத் தொற்றாளர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை என்று கொவிட்19 தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், நாட்டில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,064. அதேசமயம் தற்போதைய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2,730 ஆக காணப்படுகின்றது. இதேவேளை கொரோனாத் தொற்று தொடர்பான சந்தேகத்தின்பேரில் 94 பேர் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர். ஒரு வெளிநாட்டவர் உட்பட 655 கொரோனாத் தொற்று நோயாளிகள் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கொவிட்19 தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையங்களில், 25,074 நபர்கள் இதுவரை தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை முடித்துள்ளனர். அத்துடன் 5,222 பேர் முப்படைகளால் கண்காணிக்கப்படும் 51 நிலையங்களில் தொடர்ந்து தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். பெப்ரவரி 18 ஆம் திகதிமுதல் இன்றுவரை மொத்தம் 141,515 சோதனைகளுடன் 1,100 பி.சி.ஆர் சோதனைகள் நேற்று நடத்தப்பட்டன எனவும் நிலையம் தெரிவித்துள்ளது. (ரி3)

## இணையத்தின் ஊடாக பிறப்புச் சான்றிதழ்

கொழும்பு, ஜூலை 22

இணையத்தின் ஊடாக பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பதிவாளர் நாயகம் என்.சி விதானகே தெரிவித்துள்ளார்.

மேலும், காணிப்பதிவு சான்றிதழையும் இணையத்தின் ஊடாக வழங்கும் நடவடிக்கை அடுத்த மாதம் தொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.






குருநாகல் எல்பிட்டிய பகுதியில் சட்டவிரோதமான ஆயுதங்களுடன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து துப்பாக்கி, கைக்குண்டு, தோட்டாக்கள், வெடி மருந்துகள், மூன்று வாள்கள் மற்றும் இராணுவ சீருடை உள்ளிட்ட பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

## மேலும் 28 மாலுமிகள் இன்று நாட்டுக்கு வருகை

கொழும்பு, ஜூலை 22

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலில் பணியாற்றுவதற்காக 28 வெளிநாட்டு மாலுமிகள் இன்று நாட்டை வந்தடைந்துள்ளனர். டோஹா விலிருந்து கட்டார் எயர்வேஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான கியூ.ஆர் 668 என்ற விமானத்தின் மூலமாக இன்று அதிகாலை 1.30 மணிக்கு பண்டாரநாயக்க, கட்டுநாயக்க விமான நிலையத்தை அவர்கள் வந்தடைந்தனர்.

விமான நிலையத்திற்கு வந்த பின்னர் அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. (ரி1)

# மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு விரைவில் தீர்வுத்திட்டம்

## ஜனாதிபதி உத்தரவாதம்

கொழும்பு, ஜூலை 22

மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய வகையில் அவர்களது விளைச்சல்களுக்கு உரிய விலையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய திட்டங்கள் வகுக்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் வலப்பனை வாராந்த சந்தை வளவில் நேற்று இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மரக்கறி மற்றும் பழ வகைகள் விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாக்கக்கூடிய வகையில் நாடு முழுவதிலும் விநியோகிக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். இதேவேளை அரச வங்கிகள் கடன் வழங்கும் விதம் நிவாரணம் அளிப்பதாக இல்லையென விவசாயிகள் ஜனாதிபதியிடம் முறையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

# 24 மணிநேரத்தில் 1,630 பேர் கைது

நாடுமுழுவதும் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 முதல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணிவரை முன்னெடுக்கப் பட்ட விசேட சுற்றி வளைப்பின் போது 1630 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோத ஆயுதங்கள், போதைப் பொருள்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தமை தொடர்பிலும், பிடியாணை உத்தரவு வழங்கப்பட்டிருந்தவர்கள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் வைத்திருந்தமை தொடர்பில் 390 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவர்களில் 238 சந்தேகநபர்கள் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 148 கிராம் 341 மில்லி கிராம் தொகை ஹெரோய்ன் கைப்பற்றப் பட்டுள்ளது.

கஞ்சா போதைப்பொருளுடன் 140 பேர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இவர்களிடமிருந்து ஒரு கிலோ 116 கிராம் 232 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இதேவேளை ஐஸ் போதைப்பொருளுடன் 12 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவரிடமிருந்து 191 கிராம் 210 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப் பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானம் தொடர்பில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளில் 278 பேர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவர்களிடமிருந்து 7659 லீற்றர்கள் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருந்தமை தொடர்பில் 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவர்களிடமிருந்து ரிபீடர் ரக துப்பாக்கி, 3 உள்நாட்டு துப்பாக்கிகள், 123 தன்னியக்க தோட்டாக்கள் மற்றும் இரு கத்திகள் மீட்கப்பட்டுள்ளன.

வெடிமருந்துகளை வைத்திருந்தமை தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து இரு கைக்குண்டுகளும், 5 டெட்டனேட்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை பிடியாணை பிறப்பிக்கப் பட்டிருந்த 309 சந்தேகநபர்களும், வேறுவகையான குற்றச்செயல்களைப் புரிந்த 641 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர். (ரி1)

# கறுப்பு சிறுத்தையொன்றை எமது நாடு இழந்துவிட்டது

## கவலை தெரிவித்த பிரதமர்

கொழும்பு, ஜூலை 22

மிகவும் அரிய வகையிலான கறுப்பு சிறுத்தையொன்றை நாம் இழந்துவிட்டோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினருடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி நாவலப்பிட்டி மாபகந்த பிரதேசத்தில் பந்தரா பாதுஸ் வகையைச் சேர்ந்த ஏழு வயதுடைய சிறுத்தை யொன்று வில்லில் சிக்கி உயிரிழந்தது. கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியிருந்த நிலையில், அதன் எதிரொலியாக மிகவும் அரிய வகையிலான கறுப்பு சிறுத்தையொன்றை எமது நாடு இழந்தமையைச் சுட்டிக்காட்டிய பிரதமர், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை விழிப்பூட்டி மீண்டும் அவ்வா



றானதொரு சம்பவம் இடம்பெறாதிருக்கும் வகையில் செயற்படுமாறும், வன விலங்குகளின் பாதுகாப்பு தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் மிருகங்களை வேட்டையாடும் செயற்பாடு தொடர்பில் உடனடியாக சோதனை நடத்துமாறும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.சி.சூரிய பண்டாரவுக்கு பிரதமர் பணித்துள்ளார். (ரி1)

# 4,363 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 22

நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் விதிமீறல் தொடர்பாக இதுவரையில் 4 ஆயிரத்து 363 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 8ஆம் திகதியில் இருந்து நேற்றுப் பிற்பகல் மாலை 4 மணியான காலப்பகுதி வரையிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. நேற்றுமுந்தினம் முதல் நேற்று மாலை வரையான காலப்பகுதியில் மாத்திரம் 178 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

# சில இடங்களில் மழை பெய்யலாம்

கொழும்பு, ஜூலை 22

நாட்டின் சில பகுதிகளில் மழையுடனான வானிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில், பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ விருத்தியடையக் கூடும்.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 75 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்று வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சிறையில் உள்ள சிலரால் கோத்தா உயிருக்கு ஆபத்து!

## சி.ஐ.டியினர் விசாரணை

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பூசா சிறைச்சாலையில் உள்ள கைதிகள் சிலர் ஜனாதிபதியினதும், பாதுகாப்புச் செயலரினதும் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று அந்தச் சிறைச்சாலையின் ஆணையாளர் நாயகம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு செய்துள்ளார். பூசா சிறைச்சாலையில் உள்ள கொஸ்கொட தாரக என்பவரை விசாரணைக்கு உட்படுத்திய போது, இந்தத் தகவல்கள் வெளியாகின என்று சிறைச்சாலை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது விடயம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார். விசாரணைகளின் போது இவ்வாறான அச்சுறுத்தல்களை விடுத்த ஏனையவர்களின் விவரங்கள் தெரியவந்ததன் பின்னர் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# அரசு எடுத்த முடிவுகளால் நட்டம் குறைந்துள்ளதாம்!

## *மின்சார சபையின் தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 22

கடந்த சில மாதங்களில் அரசு மேற்கொண்ட சரியான தீர்மானங்களால் இலங்கை மின்சார சபையின் நஷ்டம் 2 ஆயிரம் கோடி ரூபாவால் குறைந்துள்ளது என்று சபையின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மின்சார சபைக்கு எரிபொருள் நிவாரணம் கிடைத்தமை, தாமதமான திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடிந்தமை போன்றவை இதற்குக் காரணங்களாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் 19 நெருக்கடியால் அழுத்தங்களை எதிர்கொண்ட பாவனையாளர்கள் 67 இலட்சம் பேருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக இலங்கை மின்சார சபை 300 கோடி ரூபாவுக்கு மேலான தொகையைச் செலவு செய்ய நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)





## கடற்படைத் தளபதி - இராணுவத் தளபதி சந்திப்பு

புதிய கடற்படைத் தளபதி வைஸ் அத்மிரால் நிஷாந்த, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவை ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவ தலைமையகத்தில் நேற்றைய தினம் சந்தித்திருந்தார்.

இதன் போது இராணுவ சம்பிரதாய முறைப்படி அணிவகுப்பு மரியாதைகளுடன் வரவேற்பளிக்கப்பட்டதுடன், நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன. (ரி1)

# சுவிஸ் அதிகாரி வழக்கில் ஊடகவியலாளரால் தடை?

## விசாரணை நடத்த நீதிமன்று பணிப்பு

கொழும்பு, ஜூலை 22

கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரக அதிகாரி கானியா பெரிஸ்டா பிரான்சிஸ் கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு வெளிநாட்டில் உள்ள ஊடகவியலாளர் தர்சா பெஸ்டியன்ஸால் ஏதேனும் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பின் அது தொடர்பாக விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு விடயங்களைத் தெளிவுப்படுத்தினர். ஊடகவியலாளர் தர்சா பெஸ்டியன்ஸின் மடிக்கணினி நீதிமன்றத்தின் தேடுதல் பிடியாணை அனுமதிக்கமைய ஜூன் மாதம் 10 ஆம் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது என்று அவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

ஊடகவியலாளர் தர்சா பெஸ்டியன்ஸை பிரதிநிதித்துவப்படுத்தி மன்றில் முன்னிலையான சட்டத்தரணி சிராஸ் நூர்டின், குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தமது கட்சிக்காரரின் மடிக்கணினியை ஜூன் 10 ஆம் திகதி பெற்றுக்கொள்ளவில்லை, மாறாக ஜூலை 4 ஆம் திகதியே மடிக்கணினி பெறப்பட்டது என்று கூறினார்.

அதனால் மடிக்கணினியில் உள்ள தரவுகள் மாற்றப்பட்டுள்ளனவா? என விசாரிக்குமாறு சட்டத்தரணி சிராஸ் நூர்டின் நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டார். ஜூன் 4 ஆம் திகதி தனது கட்சிக்காரரின் வீட்டுக்கு வந்திருந்தாலும், ஜூன் 10ஆம் திகதியே மடிக் கணினியை எடுத்துச் சென்றதாக தனக்கு தகவல் கிடைத்தாக சட்டத்தரணி சிராஸ் நூர்டின் மன்றில் ஒப்புக்கொண்டார். அப்போது குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் சார்பில் முன்னிலையான எஸ்.பி மெரில் ரஞ்சன் லமஹேவா நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தார். ஊடகவியலாளர் தர்சா பெஸ்டியன்ஸ் வேண்டுமென்றே விசாரணைகளைத் தடுக்க முயற்சிக்கின்றாரா என்ற சந்தேகம் எழுகின்றது என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் தர்சா பெஸ்டியன் ஆரம்பத்தில் இருந்தே இது குறித்த விசாரணைக்கு தடையை ஏற்படுத்துகின்றமை தெரியவந்துள்ளதால் அது குறித்து விசாரணை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன, ஊடகவியலாளர் தர்சா பெஸ்டியன்ஸினால் ஏதேனும் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பின் அது குறித்து விசாரணை நடத்த குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கை செப்ரெம்பர் 8 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக தீர்மானித்த நீதிவான், அன்று விசாரணையின் முன்னேற்றம் குறித்த அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதேவேளை அண்மையில் நீதிமன்றம் வெளியிட்ட அறிவித்தலின் பிரகாரம் வெளிநாட்டில் உள்ள ஊடகவியலாளர் தர்சா பெஸ்டியன்ஸின் மாமனார் உபாலி இந்திரகுப்தவும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி அவர் நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார். (எ)

# கைகொடுக்கும் பாப் டு ப்ளெசிஸ்

லண்டன், ஜூலை 22

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலனுக்காக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் பாப் டு ப்ளெசிஸ் நிதி திரட்ட முன்வந்துள்ளார்.

டு ப்ளெசிஸ் தன்னுடைய புதிய ரகத் துடுப்பு மட்டை மற்றும் தான் அணிந்த 18ஆம் இலக்க இளஞ் சிவப்பு நிற சீருடை என்பவற்றை கொவிட் 19 வைரஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலனுக்காக ஏலம் விடத் தீர்மானித்துள்ளார்.

இந்தச் சீருடையானது 2016ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியுடன் நடைபெற்ற ஒருநாள் போட்டியின் போது டு ப்ளெசிஸ் அணிந்திருந்த சீருடையாகும்.

ஏலத்தில் விடப்படும் தன்னுடைய பொருள்களின் மூலம் வரும் தொகையை தென்னாபிரிக்காவில் கொவிட் 19 வைரஸ் பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் நலனுக்காக கொடுக்க டு ப்ளெசிஸ் முன்வந்துள்ளார். தென்னாபிரிக்கா பணப் பெறுமதியில் 5 இலட்சம் வரையில் நிதி திரட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். இந்தத் திட்டம் ஹில்சோங் ஆப்ரிக்கா பவுண்டேஷன் சார்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ)






# சாதனையாளன் ரொனால்டா

லண்டன், ஜூலை 22

இங்கிலீஷ் பிரிமீயர் லீக், லா லிகா, சீரி ஏ என மூன்று லீக்குகளிலும் 50 கோல்களுக்கு மேல் அடித்து கிறிஸ்டியானோ ரொனால்டா அரிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.

இத்தாலியில் நடந்து வரும் 'சீரி ஏ' கிளப் கால் பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த ஒரு லீக் ஆட்டத்தில் யுவென்டஸ் அணி 21 என்ற கோல் கணக்கில் லாஜியோவை வீழ்த்தியது. யுவென்டஸ் அணியின் இரண்டு கோல்களையும் 51 மற்றும் 54ஆவது நிமிடங்களில் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ அடித்தார். இதுவரை 34 ஆட்டங்களில் ஆடியுள்ள யுவென்டஸ் அணி 25 வெற்றி, 5 டிரா,4 தோல்வி என்று 80 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

'சீரி ஏ' போட்டியில் ரொனால்டோ ஒட்டு மொத்தமாக இதுவரை 51 கோல்கள் (61 ஆட்டம்) அடித்துள்ளார். இதன் மூலம் 'சீரி ஏ', 'லா லிகா', "இங்கிலாந்து பிரிமீயர் லீக் " ஆகிய மூன்று போட்டிகளில் 50 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை போர்த்துக்கலைச் சேர்ந்த ரொனால்டோ படைத்தார். (எ)

# நிடினி எப்போதும் ஹீரோ

## சமி தெரிவிப்பு

லண்டன், ஜூலை 22

தென்னாபிரிக்க வீரர் மகாயா நிடினி கூறியவற்றைக் கேட்டவுடன் அவரது சக வீரர்கள்மீது கொண்டிருந்த மதிப்பு குறைந்து விட்டது என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் அணித் தலைவர் டெரன் சமி தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் மகாயா நிடினி, தனது அணியில் நிறவெறி காணப்பட்டது என்று தனது அனுபவத்தை வேதனையுடன் பகிர்ந்திருந்தார். அதையடுத்தே மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் டெரன் சமி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளாவது

ஐ.பி.எல். தொடரில் இந்திய வீரர்கள் சிலரிடமும் இவ்வாறான நிறவெறி இருந்தது. மகாயா நிடினிக்கும் இது ஏன் என்று என்னைப் போலவே புரியவில்லை. தனிமையிலிருந்து அவர் ஓடியே போயிருக்கிறார். அவரது சக வீரர்கள் மேல் இருந்த மதிப்பு போய் விட்டது. நிடினி நீங்கள் எங்களுக்கு எப்பவுமே ஹீரோதான். என்றார். (எ)

# முதலிடத்தில் பென் ஸ்டாக்ஸ்

லண்டன், ஜூலை 22

இங்கிலாந்து அணி வீரர் பென் ஸ்டாக்ஸ் சகலதுறை ஆட்டக்காரர்களுக்கான தரவரிசையில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். துடுப்பாட்டத் தரவரிசையிலும் முன்னேறியுள்ளார்.

தற்போது இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையே 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்றது. முதல் டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளும், இரண்டாது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்தும் வெற்றிபெற்றுச் சமநிலையில் உள்ளன.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பென் ஸ்டாக்ஸ் முதல் இன்னிங்ஸில் 178 ஓட்டங்களையும், இரண்டாம் இன்னிங்ஸில் 78 ஓட்டங்களையும் பெற்றுச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். முதல் இன்னிங்கிஸில் ஒரு இலக்கையும், இரண்டாம் இன்னிங்ஸில் இரண்டு இலக்குகளையும் பெற்றிருந்த ஸ்டாக்ஸ், சிறப்பான களத்தடுப்பையும் வெளிக்காட்டியிருந்தார்.(எ)

# பாகிஸ்தான் அணி இம்முறை பாயும்!

## வக்கார் யூனிஸ் நம்பிக்கை

இஸ்லாமாபாத், ஜூலை 22

இங்கிலாந்து தொடரில் பாகிஸ்தான் அணி சிறப்பாக செயல்படும் என்று அந்த அணியின் பந்து வீச்சு பயிற்சியாளர் வக்கார் யூனிஸ் தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் மாதம் இங்கிலாந்து செல்லவுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட் மற்றும் மூன்று ரி20 ஆட்டங்களில் பங்குகொள்கின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் மன்செஸ்டரில் 5ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே வக்கார் யூனிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மேற்கிந்தியத் தீவுகள் -இங்கிலாந்துத் தொடரைப் பார்க்கையில் எங்களுக்கு சில யோசனைகள் கிடைத்துள்ளன. இந்த ஆடுகளத்தில் எந்த வீரர்களால் நன்றாகச் செயல்பட முடியும் என்பதற்கு ஏற்ப நாங்கள் தயாராகுவோம். எச்சில் கொண்டு பந்தை பளபளப்பாக்க தடை விதிக்கப்பட்டு இருப்பதால் வேகப்பந்து வீச்சாளர்கள் சிரமத்தை சந்திப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் வியர்வையைப் பயன்படுத்தி பந்து வீச்சில் குறை சொல்ல முடியாத வகையில் செயல்பட்டனர்.

இந்தத் தொடரில் நிச்சயம் எங்கள் அணியின் ஆதரவாளர்களுக்கு ஏமாற்றம் அளிக்கமாட்டோம். எங்கள் திறமையை பயன்படுத்தி பெருமைப்படும் வகையில் செயல்பட முயற்சிப்போம்- என்றார். (எ)

# டிக்வெலவின் தந்தை காலமானார்

கொழும்பு, ஜூலை 22

இலங்கை கிரிக்கெட் அணி வீரர் நிரோஷன் டிக்வெல்லவின் தந்தை காலமானார்.

சுமார் ஒருவார காலமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். அவரது இறுதிச் சடங்குகள் நாளை கண்டியில் நடைபெறவுள்ளது. (எ)




இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 22.07.2020 இல் வெளியிடப்பெற்றது.